## இளைஞர்களிடையே தொழில் முனைவிற்கான சிந்தனையை ஊக்குவிக்க 2000 உயர்கல்வி நிறுவனங்களில் ‘நிமிர்ந்து நில்’ மேம்பாட்டுத் திட்டம்!

# குறு உற்பத்தி நிறுவனங்களுக்கான மானிய உச்ச வரம்பு ரூ.5 லட்சத்திலிருந்து 10 லட்சமாக உயர்வு!

## காஞ்சிபுரம் மாவட்டம் – திருமுடிவாக்கம் தொழிற்பேட்டையில் – ரூ.37.25 கோடி மதிப்பில் தொழிலாளர்கள் தங்கும் விடுதி!

## சட்டப் பேரவையில் – குறு, சிறு – நடுத்தரத் தொழில்கள் துறை மானியக் கோரிக்கையில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!

**சென்னை, ஏப். 11 -**

**சட்டப் பேரவையில், நேற்று முன்தினம் (09.04.2025 ) குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளித்து உரையாற்றிய அமைச்சர் தா.மோ.அன்பரசன் “குறு உற்பத்தி நிறுவனங்களுக்கு வழங்கப்படும் 10 விழுக்காடு கூடுதல் முதலீட்டு மானியத்தின் உச்சவரம்பு ரூ.5 இலட்சத்திலிருந்து ரூ.10 லட்சமாக உயர்த்தப்படும்” என்றும் - “இளைஞர்களிடையே தொழில் முனைவிற்கான சிந்தனையை ஊக்குவிக்க, 2000 உயர்கல்வி நிறுவனங்களில் ரூ.19 கோடி மதிப்பீட்டில் ‘நிமிர்ந்து நில்’ எனும் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும்” என்றும் அறிவித்தார்.**

சட்டப் பேரவையில் அமைச்சர் தா.மோ.அன்பரசனின் பதிலுரை வருமாறு:-

நூற்றாண்டு காலம் வாழ்ந்து ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கான அஞ்சாத சாதனைகள் புரிந்த அஞ்சுகத் தாய் புதல்வர், கடல்போல் அறிவும், மலைபோல் துணிவும், அலைபோல் முயற்சியும், நதிபோல் அன்பு கொண்டு நம்மை வழிநடத்திய வரலாற்று தலைவர், எழுத்தாளராய், பத்திரிகையாளராய், திரை வசனகர்த்தாவாய், பாடலாசிரியராய், அரசியல் தலைவராய், அகிலம் போற்றும் முதல்வராய், சென்ற திசையெல்லாம் சிகரம் தொட்ட மாமனிதர் தலைவர் கலைஞர் திசைநோக்கி என் வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் உயிரே, ஒவ்வொரு அணுவிலும் கலந்திருக்கும் உயிர்மூச்சே, தளபதியாகவும், தலைவராகவும் வழிநடத்தும் எங்கள் கலங்கரை விளக்கமே, ஆதிக்க இருட்டை வெளிச்சக் கத்திகளால் வெட்டி வீழ்த்தும் ஆதவனே, இந்தித் திணிப்பை ஓட ஓட விரட்டும் திராவிடச் சிங்கமே, பெரியாரின் கொள்கையும், அண்ணாவின் அர்ப்பணிப்பும், கலைஞரின் உழைப்பும் கலந்து உருவான கழகத் தலைவரே, கற்கால ஆட்சியை விரட்டி தற்காலத்தை பொற்காலமாக ஆக்கிய எங்களின் வசந்தகாலமே, முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்ற பெயரைக் கேட்டால் இன்று மொத்த இந்தியாவும் நடுங்குகிறது.

திராவிட எஃகு கோட்டையின் சுவர்களில் சனாதன நரிகள் மோதி மூக்குடைந்து நிற்கின்றன. அகிலம் போற்றும் நல்லாட்சி நாயகரே, அன்னை தமிழகத்தின் காவலரே, எங்கள் முதல்வரே உங்களை வணங்குகிறேன். கோடிக்கணக்கான இளைஞர்களின் நாடித்துடிப்பாய் இருக்கும் இளைய சூரியனே, பிற்போக்கு சக்திகளை தகர்த்தெறியும் பீரங்கியே, பெரியாரின் கனவே, கலைஞரின் வடிவே, புதிய யுகத்தை நோக்கி நடைபோடும் தமிழ் மண்ணின் பூபாளமே, மக்களின் மனங்களை ஆளும் மாமன்னனே, எங்கள் துணை முதல்வரே, உதயநிதி அவர்களே (மேசையைத் தட்டும் ஒலி) உங்களை வணங்குகிறேன். அவை முன்னவர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், துணை சபாநாயகர், கொறடா அவர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய வணக்கத்தை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியாவின் கூட்டாட்சித் தத்துவத்தை பாதுகாத்து மாநிலங்களின் உரிமையை மீட்டெடுக்க சட்டப் போராட்டம் நடத்தி வரலாற்றுச் சிறப்புமிக்க உச்ச நீதிமன்றத் தீர்ப்பை பெற்று இந்தியாவிற்கே வழிகாட்டிய சரித்திர நாயகனுக்கு என் நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**50 ஆண்டு பணியை 5 ஆண்டுகளில் செய்த முதல்வர்!**

2025-2026 ஆம் ஆண்டு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மானியக் கோரிக்கையில் உரையாற்றுவதற்கு வாய்ப்பு வழங்கிய, நாம் எல்லாம் உயர்வாக போற்றுகிற நம்முடைய ஒப்பற்ற தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்து என் உரையை தொடங்குகிறேன்.

### கரூர் மாவட்டம், மணிமங்கலம் வட்டம், ஆத்தூர் கிராமத்தில் செயற்கையிழை ஆடைகள் (Synthetic Textile Clothing) குழுமத்திற்கான பொது வசதி மையம் ரூ.31.75 கோடி திட்ட மதிப்பில் நிறுவப்படும்.

நம்முடைய அவர்கள், கலைஞராக இருந்தாலும், கலைஞருக்குப் பிறகு ஆட்சிப் பொறுப்பேற்ற நம்முடைய முதல்வராக இருந்தாலும் ஐந்து ஆண்டுகளில், 50 ஆண்டுகளில் செய்ய வேண்டிய பணிகளையெல்லாம் ஐந்தே ஆண்டுகளில் செய்து தமிழகத்தை ஒரு வளர்ச்சிப் பாதைக்கு கொண்டு செல்கிற தலைவராக நம்முடைய தலைவர் இருந்து கொண்டிருக்கிறார். அதற்கு உதாரணமாக இந்த நான்கு ஆண்டுகளில் திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்ற பிறகு 895 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் 10 இலட்சத்து 14 ஆயிரத்து 368 கோடி முதலீடுகளைப் பெற்று இன்றைக்கு தமிழ்நாட்டில் இருக்கிற 32 இலட்சத்து 4 ஆயிரத்து 895 நபர்கள் வேலை வாய்ப்புகளை உருவாக்கி இந்தியாவிலேயே நம்பர் ஒன் முதல்வர் என்ற பெயரை பெற்றிருக்கிற முதல்வர்தான் (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய தலைவர் என்பதை நான் பெருமையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

2021 - 2022 ஆம் ஆண்டுக்கு முன் கொரோன கால பாதிப்பு, GST, பண மதிப்பிழப்பு கடந்த கால அரசின் செயல்பாடுகளால், தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி தடைபட்டு பெரும் பாதிப்புக்கு உள்ளாகிய நிலையிலே கழக அரசு பொறுப்பேற்று தமிழ்நாடு முதலமைச்சருடைய வெற்றிகரமான முன்னோடி திட்டங்களால் தமிழ்நாடு கடந்த நிதியாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 9.69 சதவிகிதம் வளர்ச்சி அடைந்து இந்தியாவிலேயே முதல் இடத்தில் உள்ளது. இது கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத மிகப் பெரிய வளர்ச்சி என்பதை நான் பெருமையோடு இந்த அவையிலே தெரிவிக்க விரும்புகிறேன்.

சமச்சீர் வளர்ச்சி, மகளிர் முன்னேற்றம், நிலையான நிர்வாகம், தொலைநோக்கு திட்டங்களால் இந்திய அளவில் 39 ஆயிரத்து 666 பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளை கொண்டு தமிழ்நாடு இன்றைக்கு முதலிடம். தொழிற்சாலைகளில் பணிபுரிகிற தொழிலாளர்களின் எண்ணிக்கையில் 15 சதவிகிதம் கொண்டு தமிழ்நாடு முதலிடம். தொழிற்சாலைகளில் பணியுரியும் மகளிர் எண்ணிக்கையில் 42 சதவிகிதம் பெற்று இன்றைக்கு தமிழ்நாடு முதலிடம்.

திறன் வாய்ந்த தொழிலாளர்கள் எண்ணிக்கையில் தமிழ்நாடு முதலிடம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய ரிசர்வ் வங்கியினுடைய தொழில் வளர்ச்சி குறித்த ஆய்வறிக்கையில் மனித உழைப்பு நாட்களின் அடிப்படையில் குஜராத், மகாராஷ்டிரா மாநிலங்களை பின்னுக்குத் தள்ளி இன்றைக்கு தமிழ்நாடு முதலிடம். (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்றிய அரசின் நிதி ஆயோக் வெளியிட்ட ஏற்றுமதி தயார் நிலை குறியீட்டில் 80.89 புள்ளிகள் பெற்று இன்றைக்கு தமிழ்நாடு முதலிடம். உற்பத்தி பொருட்களை மாநிலங்களிடையே எளிதாக கொண்டு செல்வதில் தமிழ்நாடு முதலிடம். புதிய கண்டுப்பிடிப்புகளுக்கு காப்புரிமை (Patent) பெறுவதில் இன்றைக்கு தமிழ்நாடு முதலிடம். TN-Start up, கடைசி இடத்தில் இருந்து முன்னேறி இந்திய அளவில் சிறந்த செயற்பாட்டாளர் விருதினை பெற்று இன்றைக்கு தமிழ்நாடு முதலிடம். நிதி ஆயோக் அமைப்பின் சிறந்த புத்தாக்க சூழல் கொண்ட முதன்மை மாநிலங்கள் பட்டியலில் இன்றைக்கு தமிழ்நாடு முதலிடம் என்று அனைத்திலும் முதலிடம் வருவதற்கு காரணம் நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய அயராத உழைப்பும், அவரது தொலைநோக்கு திட்டங்களும்தான் என்பதை இந்த மாமன்றத்திலே நான் பெருமையோடு தெரிவிக்க விரும்புகிறேன்.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பதுடன், வேளாண்மைக்கு அடுத்தப்படியாக அதிக தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய முக்கியத்

### திருப்பூர் மாவட்டம், பெருமாநல்லூர் வட்டம், கல்லிப்பாளையம் கிராமத்தில் ஆஃப்செட் பிரிண்டிங் மற்றும் புக் பைண்டிங் குழுமத்திற்கான பொது வசதி மையம் ரூ.31.75 கோடி திட்ட மதிப்பில் நிறுவப்படும்!



துறையாகும். மேலும், குறைந்த முதலீட்டில் தொழில் முனைவோர்களை உருவாக்கி, அதிகமான வேலை வாய்ப்புகளை வழங்கி, பெரும் தொழிற்சாலைகளுக்கு துணையாக இருந்து நாட்டின் சமச்சீரான தொழில் வளர்ச்சிக்கு துணை புரிந்து வருகிறது. நாட்டின் உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தி, அப்பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதால் மக்கள் கிராமப்புறங்களிலிருந்து நகர்ப்புறங்களுக்கு குடிபெயர்வது பெருமளவு தடுக்கப்படுகிறது. MSME நிறுவனங்கள், இந்தியாவின் ஏற்றுமதியில் பெரும்பங்கு வகித்து அந்நியச் செலாவணியை ஈட்டி, நாட்டின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றி வருகிறது.

**தென்னை நார் தொழில்!**

நாட்டின் தொழில் வளர்ச்சியில் MSME நிறுவனங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்த, நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இந்தியாவிலேயே முதன் முதலாக MSME நிறுவனங்களுக்கு என்று தனி கொள்கையை 2008 ஆம் ஆண்டு வெளியிட்டார் என்பது மிகப்பெரிய ஒரு வரலாறு. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியில் வந்த நம்முடைய முதல்வர் அவர்கள் Start Up தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கு தகுந்த சூழலை உருவாக்கிட, தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க கொள்கை-2023-யும், தென்னைநார் தொழில் வளர்ச்சியின் மூலம் தென்னை விவசாயிகளினுடைய வருமானம் உயர்ந்திட தென்னைநார் தொழில் கொள்கை-2024-யும் வெளியிட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், MSME துறையின் வளர்ச்சிக்காக நம்முடைய முதல்வர் அவர்கள் மற்ற மாநிலங்களும் பின்பற்றும்வகையில் பல்வேறு புதிய திட்டங்களை அறிவித்து இன்றைக்கு செயல்படுத்தி வருகிறார்.

குறிப்பாக, 200-க்கும் மேற்பட்ட உரிமங்களை தொழில் நிறுவனங்கள் ஒரே இடத்தில் பெற்றிட ஒற்றைச் சாளர இணைய தளம் 2.0 திட்டம், இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத திட்டமான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரை தொழில்முனைவோர்களாக உருவாக்க அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம், துப்புரவு பணியாளர்களுக்கு மானிய விலையில் நவீன இயந்திரங்களை வழங்கி அவர்களையும் தொழில் முனைவோராக உருவாக்கும் துப்புரவு தொழிலாளர்கள் மறுவாழ்வு திட்டம், அனைத்து கைவினை கலைஞர்களுக்கும் மானியத்துடன் கடன் உதவி வழங்கிடும் கலைஞர் கைவினைத் திட்டம், தொழில்முனைவோருக்கு எளிதில் கடன் கிடைத்திட 90 சதவீதம் வரை கடன் உத்தரவாதம் அளித்திடும் தமிழ்நாடு கடன் உத்தரவாதத் திட்டம், அரசு நிறுவனங்களுக்கு MSME நிறுவனங்கள் வழங்கும் சேவை மற்றும் விற்பனைகளுக்கான பட்டியல்களை வங்கியில் வைத்து எளிதில் கடன் பெற தமிழ்நாடு வர்த்தக வரவுகள் மற்றும் தள்ளுபடி தளம்-TN TReDS திட்டம், கிராமப்புறப் பகுதிகளில் உள்ள தொழில்முனைவோரின் வளர்ச்சிக்காகவும், நிலையான வேலை வாய்ப்பிற்காகவும் குறுங்குழும மேம்பாட்டுத் திட்டம்-Micro Cluster, MSME நிறுவனங்கள் உலகத்தரத்தில் உற்பத்தி செய்திட நவீன தொழில்நுட்ப வசதியை அளித்திடும் பெருங்குழும மேம்பாட்டுத் திட்டம்-Mega Cluster, தொழிலாளர்கள் பணிபுரியும் பகுதியிலேயே அவர்களுக்கு குறைந்த வாடகையில் தங்குவதற்கு தொழிலாளர் விடுதிகள், தொழில்முனைவோர்களின் நீண்ட நாள் கோரிகையை நிறைவேற்றும் வகையில் சிட்கோ தொழில்மனைகளுக்கு பட்டா, தொழில் தொடங்கவுள்ள Startup நிறுவனங்களுக்கு உதவிடும் புத்தொழில் ஆதார நிதி வழங்கும் திட்டம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரை புத்தொழில்முனைவோராக உருவாக்கிடும் SC/ST Start Up ஆதார நிதித் திட்டம், சமச்சீர் தொழில் வளர்ச்சிக்கு உதவிடும் வகையில் Start UP நிறுவனங்களுக்கு வட்டார புத்தொழில் மையங்கள், SC, ST மற்றும் விளிம்பு நிலை சமூகத்தினரால் நடத்தப்படும் புத்தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கு உதவிடும் தந்தை பெரியார் சமூக நீதி தொழில் வளர் மையம், வேளாண் விளை பொருட்களுக்கு நல்ல விலை கிடைத்திட தமிழ்நாடு உணவுப் பதப்படுத்துதல் மற்றும் வேளாண்மை ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம்-TN-APEx உருவாக்கம், தென்னை நார் தொழில் வளர்ச்சிக்கு தமிழ்நாடு கயிறு வணிக மேம்பாட்டு நிறுவனம்-டான் காயர் (TAN-COIR) உருவாக்கம், பள்ளி மாணவர்களிடம் புதிய கண்டுப்பிடிப்புகளை ஊக்குவிக்க பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டம்.

இதுவரை நான் குறிப்பிட்ட எல்லாத் திட்டங்களும் முத்தாய்ப்பாக இந்த நிதியாண்டில் நம்முடைய நிதி நிலை அறிக்கையில் ரூபாய் 2,25 கோடி நிதி ஒதுக்கி, அடுத்த ஐந்தாண்டுகளில் 1 இலட்சம் மகளிரை தொழில்முனைவோர்களாக ஆக்கும் திட்டம் (மேசையைத் தட்டும் ஒலி) என எண்ணற்ற புதிய திட்டங்களைச் செயல்படுத்தி, 10 ஆண்டு கால அ.தி.மு.க ஆட்சியில் புதிய திட்டங்கள் ஏதுமின்றி, நலிவுற்று இருந்த MSME நிறுவனங்களின் வளர்ச்சி பாதைக்கு வழிகாட்டியவர் நம்முடைய தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் என்பதை இந்த அவையில் பெருமையோடு கூற விரும்புகிறேன்.

**திட்டங்களில் சீர்திருத்தம்!**

நம்முடைய முதல்வர் அவர்கள் பல்வேறு புதிய திட்டங்களை அறிவித்து செயல்படுத்துவது மட்டுமல்லாமல், ஏற்கெனவே செயல்பாட்டில் உள்ள திட்டங்களை வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் திட்டம், புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டு திட்டம் NEEDS திட்டங்களில், அதிக எண்ணிக்கையிலான தொழில் முனைவோர்கள் பயன்பெறுகிற வகையில், திட்ட மதிப்பீடு, மானியம், வயது உச்ச வரம்பு ஆகியவற்றை உயர்த்தியும், கல்வி தகுதியினைத் தளர்த்தியும், பல சீர்திருத்தங்களை கழக அரசு கொண்டுவந்து, செயல்படுத்தி வருகிறது.

அதிலே, MSME தொழில் நிறுவனங்களின் கோரிக்கைகளை ஏற்று முதலீட்டு மானிய திட்டத்தின்கீழ், அளவிடும் கருவிகள், சோதனை உபகரணங்கள், தென்னை நார் உற்பத்தி நிறுவனங்களுக்கான பசுமைக் குடில் உலர்த்தி, இயந்திர உலர்த்தி, மாசு கட்டுப்பாட்டு உபகரணங்கள், கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம், நாடா இல்லாத தறி இணைப்புகள், சித்திர நெசவு விசைத்தறிகள், பாரம்பரிய தொழில்களான உப்பு உற்பத்தி, வெள்ளி கொலுசு, வெள்ளி விளக்கு, பித்தளைப் பொருட்கள், பித்தளை பாத்திரங்கள், பூட்டு உற்பத்தி, பட்டு சார்ந்த தொழில்கள், வீட்டு உபயோகத் துணி ஆகியவையும், சேவை தொழில்களான சேமிப்பு கிடங்குகள், குளிர்பதன கிடங்குகள், குளிரூட்டப்பட்ட போக்குவரத்து வாகனங்கள், சோதனை ஆய்வகங்கள் ஆகியவற்றை மானியப் பட்டியலில் புதியதாக சேர்க்கப்பட்டு, தற்போது இந்த தொழில்களுக்கெல்லாம் நம்முடைய அரசு மானியம் வழங்கிக் கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

MSME துறைக்கு 10 ஆண்டு கால அ.தி.மு.க ஆட்சியில், ரூ.3 ஆயிரத்து 617 கோடியே 62 லட்சம் மட்டுமே நிதி ஒதுக்கினார்கள். ஆனால் கழக அரசு பொறுப்பேற்றபின், நம்முடைய தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் இந்த 5 ஆண்டுகளில் மட்டும் 6 ஆயிரத்து 626 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, 10 ஆண்டு கால அ.தி.மு.க ஆட்சியில் ஒதுக்கப்பட்ட நிதியை விட 2 மடங்கு நிதியை ஒதுக்கி, இந்தத் துறையை தூக்கி நிறுத்திய பெருமை நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு உண்டு என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

MSME தொழில் நிறுவன முன்னேற்றத்திற்காக நம்முடைய தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த முன்னோடி திட்டங்களை மற்ற மாநிலங்கள் பின்பற்றி வருகிறது. குறிப்பாக, தமிழ்நாடு கடன் உத்தரவாதத் திட்டம், தமிழ்நாடு வர்த்தக வரவுகள் தள்ளுபடி தளம் ஆகிய திட்டங்கள் ஆந்திரா மற்றும் தெலுங்கானா மாநிலங்களில் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 2024-2025 ஆம் ஆண்டு ஒன்றிய அரசின் பொருளாதார ஆய்வறிக்கையில், தமிழ்நாடு அரசின் வர்த்தக வரவு தள்ளுபடி தளம், பிற மாநிலங்களும் பின்பற்றும் வகையில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டுள்ளது என இன்றைக்கு பாராட்டியிருக்கிறது.

தமிழ்நாடு கடன் உத்தரவாதத் திட்டத்தில், தொழில்முனைவோரின் வங்கி கடன்களுக்கு 90 சதவீதம் வரை அரசு உத்தரவாதம் அளிக்கிறது. இந்த திட்டத்தின்கீழ் 42 ஆயிரத்து 215 தொழில் முனைவோர்களுக்கு, ரூ. 7 ஆயிரத்து 550 கோடி வங்கி கடனுக்கு, தமிழ்நாடு அரசு ரூ.725 கோடியே 82 லட்சம் கடன் உத்தரவாதம் அளித்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, TN-TReDS திட்டம். வேறு எங்கும் கிடையாது. நம் தமிழ்நாட்டில் மட்டும்தான் இருக்கிறது. MSME நிறுவனங்கள் தடையின்றி உற்பத்தியை செய்திட, விலைப் பட்டியல்களை வங்கிகளில் வைத்து விரைவாக கடன் பெற வழிவகை செய்யும் தமிழ்நாடு வர்த்தக வரவுகள் தள்ளுபடி தளம், 1,329 MSME நிறுவனங்களின் ரூ.4 ஆயிரத்து 618 கோடி மதிப்பிலான விலைப் பட்டியல்களுக்கு ரூ.4 ஆயிரத்து 92 கோடி வங்கி கடன் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

புதிய தொழில் நிறுவனங்கள் தொடங்குகிறபோது, அனைத்து உரிமங்களையும் ஒரே இடத்தில் பெறுவதற்காக நம்முடைய முதல்வர் அவர்கள் 2021 ஆம் ஆண்டு Single window portal 2.0-யைக் கொண்டு வந்தார். இதுவரை 73 ஆயிரத்து 288 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, 66 ஆயிரத்து 595 உரிமங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை பெருமையோடு நான் இந்த அவையிலே சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, கலைஞர் கைவினைத் திட்டம். கைவினைக் கலைஞர்களுக்காக ஒன்றிய அரசு கொண்டுவந்த விஸ்வகர்மா திட்டம், மாணவர்கள் உயர் கல்வி பயில்வதைத் தடுத்து, குலத் தொழிலை ஊக்குவிப்பதாக உள்ளதால், அதற்கு மாற்றாக, நம்முடைய முதல்வர் அவர்கள், தமிழ்நாட்டில் உள்ள கைவினைக் கலைஞர்களை முன்னேற்றும் வகையில், சமூகப் பாகுபாடு இல்லாமல் அனைத்து கைவினைஞர்களையும் உள்ளடக்கிய கலைஞர் கைவினைத் திட்டம் என்ற ஒரு புதிய திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) விஸ்வகர்மா திட்டத்தைவிட கலைஞர் கைவினைத் திட்டத்தில் உள்ள சிறப்பை இந்த அவைக்கு எடுத்துக் கூற விரும்புகிறேன். ஒன்றிய அரசின் திட்டத்தில், பெற்றோர் செய்துவரும் தொழிலேயே பயனாளி செய்ய வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், கலைஞர் கைவினைத் திட்டத்தில், எந்தவொரு தொழிலையும் யார் வேண்டுமானாலும் செய்யலாம் என்று நாம் வரையறுத்துள்ளோம். ஒன்றிய அரசின் திட்டத்தில், 18 வயதுடையோர்தான் இதில் பயன்பெற முடியும் என சொல்லப்பட்டுள்ளது. ஆனால், நாம் 35 வயது வரை பயன்பெறலாம் என சொல்கிறோம். ஒன்றிய அரசின் திட்டத்தில், 18 வகையான கைவினைத் தொழில்கள் மட்டுமே சேர்க்கப்பட்டுள்ளன.

நமது அரசு திட்டத்தில் 25 வகையான தொழில்கள் சேர்க்கப்பட்டுள்ளன. பயனாளி கடந்த ஆண்டுகளில் ஒன்றிய மற்றும் மாநில அரசின் மானியத் தொகையுடன்கூடிய கடன் பெற்றிருக்கக் கூடாது என்று ஒன்றிய அரசின் திட்டத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. ஆனால், நமது திட்டத்தில், கடந்த 5 ஆண்டுகளில், ஒன்றரை இலட்சம் ரூபாய் வரை கடன் வாங்கியிருப்பவர்களும், மானியம் வாங்கியிருப்பவர்களும் கூட இத்திட்டத்தின்கீழ் பயன்பெறலாம் என்று வரையறுத்துள்ளோம். ஒன்றிய அரசின் திட்டத்தில், முதலீட்டு மானியம் கிடையாது. ஆனால், நமது திட்டத்தில் 25 சதவீத முதலீட்டு மானியம் வழங்கப்படுகிறது. ஒன்றிய அரசின் திட்டத்தில், கடன் 2 தவணைகளாக வழங்கப்படும் நிலை யில், நமது திட்டத்தில் கடன் ஒரே தவணையாக வழங்கப்படும். இந்த அற்புதமான திட்டத்தை, வருகின்ற 18 ஆம் தேதியன்று எங்களுடைய காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூரில் முதல்வர் அவர்கள் தொடங்கி வைக்கவிருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் ஊரில் தொடங்கி வைக்கிறார்கள்.

**இதுதான் திராவிட மாடல் அரசு!**

தொழில் துறையில் தமிழ்நாட்டை முன்னணி மாநிலமாக மற்றுவதில் முக்கிய பங்காற்றுபவை சுயதொழில் திட்டங்கள். 10 ஆண்டுக்கால அ.தி.மு.க. ஆட்சியில் 55 ஆயிரத்து 230 நபர்கள் தொழில்முனைவோர்களாக உருவாக்கப்பட்டார்கள். 10 வருடங்களில், அவர்களது ஆட்சியில், 55 ஆயிரத்து 230 தொழில்முனைவோர்களைத்தான் உருவாக்கினார்கள். ஆனால், எங்கள் கழக ஆட்சியில், நான்கே ஆண்டுகளில் 59 ஆயிரத்து 584 நபர்களை புதிய தொழில்முனைவோர்களாக உருவாக்கியிருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அ.தி.மு.க. அரசு 10 ஆண்டுகளில் செய்ததை, தி.மு.க. அரசு நான்கே ஆண்டுகளில் செய்து சாதனை படைத்துள்ளது. இதுதான் எங்கள் திராவிட மாடல் அரசு என்பதை நான் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, சமூக நீதி. எல்லோருக்கும் எல்லாம் என்ற திராவிட மாடல் அரசின் கொள்கையின்படி, கழக அரசில் உருவாக்கப்பட்ட 59 ஆயிரத்து 584 தொழில்முனைவோர்களில், 21 ஆயிரத்து 281 பேர் பெண்கள், 9 ஆயிரத்து 224 பேர் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர், 2 ஆயிரத்து 497 பேர் சிறுபான்மையினர், 717 பேர் மாற்றுத் திறனாளிகள் என இவ்வளவு தொழில்முனைவோர்களை உருவாக்கி, சமத்துவத்தையும், சமூக நீதியையும் நிலைநாட்டியுள்ளார் நம்முடைய முதல்வர் அவர்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தியாவிற்கே வழிகாட்டக்கூடிய அற்புதமான திட்டங்களின் ஒன்றுதான் அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம். இத்திட்டத்தின் மூலமாக இதுவரை ரூ.289 கோடியே 73 இலட்சம் மானியத்துடன் ரூ.539 கோடி வங்கி கடனுதவி வழங்கப்பட்டு, 3 ஆயிரத்து 166 ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மக்களை புதிய தொழில்முனைவோர்களாக இந்த அரசு உருவாக்கியுள்ளது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல. வாங்குவோர்-விற்போர் சந்திப்பு நடத்தியிருக்கிறோம். MSME துறையின்கீழ் செயல்பட்டுவரும் FaME-TN-மூலம் ஏற்றுமதியை ஊக்கப்படுத்திடவும், புதிய ஏற்றுமதியாளர்களை உருவாக்கிடவும், வாங்குவோர்-விற்போர் சந்திப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. சென்னையில் நடைபெற்ற உலக முதலீட்டாளர் மாநாட்டிலும், அயலகத் தமிழர் தின விழாவிலும், கோவையில் நடைபெற்ற வாங்குவோர்-விற்போர் சந்திப்புகளிலும் என 947 MSME நிறுவனங்களிடமிருந்து 89 வெளிநாட்டுக் கொள்முதலாளர்களுடன் 22.88 மில்லியன் அமெரிக்க டாலர், அதாவது, இந்திய ரூபாய் மதிப்பில் ரூபாய் 215 கோடியே 50 இலட்சம் மதிப்பிற்கு கொள்முதல் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

MSME நிறுவனங்களை ஊக்கப்படுத்த தமிழக அரசால் முதலீட்டு மானியம் வழங்கப்படுகிறது. 10 ஆண்டுக்கால அ.தி.மு.க. ஆட்சியில்

### தொழில் நிறுவனத்தினர் மற்றும் தகவல் தொழில் நுட்ப தொழில் முனைவோர்களின் தற்போதைய பணியிட வசதி தேவையினைப் பூர்த்தி செய்யும் வகையில் இணை பணியிட வசதி வளாகம் (CoWorking Space Building) ரூ.23.33 கோடி திட்ட மதிப்பில் 4 இடங்களில் நிறுவப்படும்.

தொடர்ச்சி 6 ஆம் பக்கம்